**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா. 14** **Date : 23.02.2026.**

| | |
|---|---|
| **Name : பெருமாள்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஓமலூர் அரசு மருத்துவமனை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக உள்ளேன். கடந்த 02.08.2019 ம் தேதியன்று இரவு 11.35 மணியளவில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.பாபு, வயது 34, த/பெ பெருமாள் என்பவரை பிரகாஷ், உதவி ஆய்வாளர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 02.08.2019–ம் தேதி இரவு 10 மணிளவில் மேச்சேரி பஸ் நிலையம் அருகே அடையாளம் தெரிந்த ஒரு நபர் கை, கட்டையால் அடித்ததாக கூறினார். இதனால் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 0.1 x 0.2 cm அளவிலான சிராய்ப்பு காயம் மூக்கின் நுனியில் காணப்பட்டது. 2) இடது புற தோள்பட்டையில் வலி இருப்பதாக கூறினார். மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து வெளிநோயாளியாக சிக்சை முடித்து அனுப்பி வைத்தேன். **மேற்படி விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7.** கடந்த 02.08.2019 ம் தேதியன்று இரவு 11.30 மணியளவில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.குருசாமி, வயது 55, த/பெ சின்னகண்ணு என்பவரை பிரகாஷ், உதவி ஆய்வாளர் மேச்சேரி என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

3) அவர் என்னிடம் கடந்த 02.08.2019–ம் தேதி இரவு 10 மணிளவில் மேச்சேரி பஸ் நிலையம் அருகே அடையாளம் தெரிந்த ஒரு நபர் கை, கட்டையால் அடித்ததாக கூறினார். இதனால் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 1 x 0.2 x 2 cm அளவிலான இடது பக்க இரண்டு 2 மற்றும் 3ம் கைவிரலுக்கு இடைப்பட்ட விரல் பகுதியில் கிழிந்த காயம் காணப்பட்டது. 2) இடது பக்க முழங்கையில் வலி இருப்பதாக கூறினார். மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து வெளிநோயாளியாக சிக்சை முடித்து அனுப்பி வைத்தேன். மேற்படி விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.8.** மேற்சொன்ன இருவருக்கும் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்துரை வழங்கினேன்.

4) 02.08.2019ம் தேதி தர்மராஜ், வயது 34, த/பெ.பெரியசாமி என்பவரை மேச்சேரி காவல்துறையினர் அழைத்து வந்து அவர் மதுபோதையில் இருந்தாரா என்பது குறித்து விசாரிக்க கோரியதன் அடிப்படையில் பரிசோதனை செய்த போது சுயநினைவுடன் இல்லாமல் குடிபோதையில் உளறிய நிலையில் இருந்தார். அவருடைய பேச்சு தெளிவான மன நிலையில் பேசுவது போல் இல்லை, உளறிக் கொண்டிருந்தார். அவர் நேர் கோட்டில் நடக்க இயலவில்லை.

5) அவருக்கு நான் ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்து ஆய்வு செய்ய சம்மதம் கோரினேன். அவர் வேண்டாமென்று கையொப்பம் செய்துவிட்டார். குடிபோதையில் இருந்ததாக சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று **அ.சா.ஆ.9** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

5) ஒரு நபர் தடுமாறி சுவர் அல்லது மரத்தில் மோதும் போது மூக்கு நுனியில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சரியாக பேச, நடக்க முடியாத நபர் எவ்வாறு கையொப்பம் செய்தார் என்றால் ஒரு கிறுக்கல் செய்துள்ளார். அவர் விருப்பம் இல்லாமல் ரத்த மாதிரி எடுக்ககூடாது என்பதால் எடுக்கவில்லை. ரத்த பரிசோனை செய்யவேண்டாமென்று சொல்லவில்லை என்றும், நானாகவே ரத்த பரிசோதனை செய்யவில்லை என்றும் போலீசார் மிரட்டி கையொப்பம் பெற்றனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) வெளிநோயாளி பிரிவில் நான் சிகிச்சை அளித்தேன். ரத்த பரிசோதனை செய்யாமல் ஒருவர் மது போதையில் இருந்ததாக உறுதியாக சொல்ல முடியாது என்றால் ஆமாம். மூக்கில் காயம் இல்லை என்று அவர் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக எதிரி நடக்கமுடியாமல் உளறிய நிலையில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கையை வேகமாக வீசி நடக்கும் போது கூர்மையான கட்டை பட்டு மேற்சொன்ன காயம் போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.